**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**O.S.NO.129/2019**

| | | |
|---|---|---|
| **NAME** | : | பூங்கொடி |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 12.07.2022.**

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குள்ள கவுண்டருக்கு ஒரே மகன் என் அப்பா மட்டும்தான் என்றால் சரி. அத்தை ஒருவர் இருந்தார். ஊமையாய் இருந்தார், அவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். குள்ள கவுண்டர் இறந்தபிறகு கோவிந்தசாமி சொத்தை தனியாக அனுபவித்து வந்தார் என்றால் சரி. குள்ள கவுண்டர் சொத்தை தனியாக ஆண்டு அனுபவித்து வந்ததினால் கோவிந்தசாமிக்கு தான செட்டில்மெண்ட் எழுத உரிமை உண்டா என்றால் சரிதான். நான் தாத்தா சொத்திற்கு உரிமை உண்டு என வழக்காடுகிறேன். அது பூர்வீக சொத்து. தான செட்டில்மெண்ட் எழுதும்போது நான், முதல் வாதி மற்றும் 3ம் வாதி பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்றோம். எங்கள் அப்பா எங்களுக்கும் கொடுக்கிறேன் என்றுதான் சொல்லி அழைத்துச் சென்றார். 3 வருடம் கழித்துதான் இந்த விஷயம் எனக்குத் தெரியவந்தது. கொடுக்கிறேன், கொடுக்கிறேன் என்றார். தானசெட்டில்மெண்ட் முன்னிலைக்கு என் அண்ணன் தம்பிகள் தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். இ–ஷெட்யூல் சொத்து கற்பனையானது என்றால் இல்லை. சித்தப்பா மருமகன் திருடிச்சென்றுவிட்டார். அப்பா இறந்து 3ம் மாதம் கும்பிடப்போனோம். எங்களுக்கு ஒரு கிராம் நகைகூட கொடுக்கவில்லை. எங்கள் அப்பா தானசெட்டில்மெண்ட் கொடுத்தது எனக்கு நன்றாகத் தெரியும் என்பதால் எனக்கு அந்த சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. உரிமை உண்டு. என் தங்கச்சி வீட்டுக்காரர் அன்றைக்கு வந்திருந்தார். இந்த வழக்கு காலதாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனக்கு திருமணமாகி 44 வருடம் ஆகிறது. என் அக்காவிற்கு அதற்கு முன்னாலேயே திருமணம் ஆனது.

.........2

என் தங்கைக்கு திருமணம் ஆகி 32 வருடம் ஆகிறது. யாரும் குறுக்கீடு செய்யாமல் என் தம்பி சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் 3 வருடம் தான் அவர் அனுபவித்து வந்தார். 4ம் வருடத்தில் நான் வழக்கு போட்டுவிட்டேன். நான் கூட்டாக அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.